بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/12/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**இறைவன் மீதான நேசத்தின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்வைப் பற்றிய ஈமானுக்கு ஒளியூட்டும், மனதைக் கவரும் நற்குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து சில விஷயங்களைக் கூறியிருந்தேன். அல்லாஹ் மீது அன்னார் கொண்டிருந்த அன்பு தொடர்பாக அன்னாரது வாழ்வின் சில அம்சங்களை இன்று எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வின் இந்த அம்சத்தின் மூலம் அல்லாஹ் அன்னாரிடம் கொண்டிருந்த அன்பும் வெளிப்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது கொண்டிருந்த அன்பு மட்டுமின்றி அல்லாஹ் அன்னாரின் மீது கொண்ட அன்பும் தெரிய வருகின்றது. அல்லாஹ் இந்த அன்பை வெளிப்படுத்திய பிறகு அன்னாருக்கு வழிகாட்டவும் செய்தான். பிறகு, அந்த அன்பினால் உந்தப்பட்டு அன்னார் எவ்வாறு தமது உம்மத்திற்கு தர்பிய்யத் வழங்கி, வழிநடத்தினார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

அல்லாஹ்வின் மீது அன்னார் கொண்டிருந்த அன்பையும் அன்னார் மீது அல்லாஹ் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாட்டையும் நாம் பல்வேறு அறிவிப்புகளில் காண்கிறோம். அன்னார் எவ்வாறான முழுமையான மனிதர் என்றால், அன்னாரின் உன்னத நிலையை வேறு எவராலும் எட்ட முடியாது. எனினும், ‘அன்னாரின் வாழ்வில் உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி உள்ளது; எனவே அன்னாரைப் பின்பற்ற முயற்சி செய்யுங்கள்’ என்று அல்லாஹ் கூறியுள்ளான். இதனால்தான் அல்லாஹ் அன்னார் வாயிலாக மக்களிடம், “நீர் கூறுவீராக! மக்களே! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், என்னைப் பின்பற்றுங்கள்; அப்போது அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான், உங்கள் பாவங்களை மன்னிப்பான். நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவான்." என்று பிரகடனப்படுத்துமாறும் கூறினான்.

எனவே, அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியிலிருந்தே நாம் கற்றுக்கொள்ள முடியும். அல்லாஹ்வின் மீது அன்னார் கொண்டிருந்த அன்பின் காட்சிகளை ஹதீஸ்களில் நாம் காண்கிறோம். அன்னார் தனது இறைவனிடம் அவனது அன்பை வேண்டியவாறு, **அல்லாஹ்வே! நான் உன்னிடமிருந்து உனது அன்பையும், உன்னை நேசிப்பவர்களின் அன்பையும், உனது அன்பிற்கு என்னை இட்டுச் செல்லும் நற்செயல்களையும் வேண்டுகிறேன். அல்லாஹ்வே! உனது அன்பை எனது உயிர், எனது குடும்பம் மற்றும் குளிர்ந்த நீரை விடவும் அதிக நேசத்திற்குரியதாக எனக்கு ஆக்குவாயாக** என்று துஆ செய்தார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நேசிப்பதாகக் கூறும் ஒவ்வொருவரும், அல்லாஹ்வின் அன்பிற்குப் பாத்திரமாக விரும்புபவரும், அல்லாஹ் அவர் மீது தன்**

**அருளை இறக்க வேண்டும் என்று விரும்புபவரும் இன்று இந்த துஆவைச் செய்ய வேண்டும்.**

அல்லாஹ்வின் மீதான அன்பின் மற்றுறொரு நிகழ்வை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்: “ஓர் இரவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஜ்தாவில் இவ்வாறு துஆ செய்ததை நான் கேட்டேன்: 'அல்லாஹ்வே! உனது கோபத்திலிருந்து உனது திருப்தியைக் கொண்டும், உனது தண்டனையிலிருந்து உனது மன்னிப்பைக் கொண்டும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். உனது புகழை என்னால் எண்ணி மாளாது. நீ உன்னைப் பற்றி எவ்வாறு புகழ்ந்தாயோ அவ்வாறே நீ இருக்கிறாய்."

அதேபோல் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மற்றோர் இடத்தில் கூறுகையில், ஓர் இரவு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்வதை நான் கேட்டேன்:

“அல்லாஹ்வே! எனது உடலும் உள்ளமும் உனக்கே சஜ்தா செய்கின்றன. எனது உள்ளம் உன் மீது ஈமான் கொள்கிறது. என் இறைவா! இதோ எனது இரு கைகள் உனது முன்னிலையில் விரிந்துள்ளன. இவற்றைக் கொண்டு எனது ஆன்மாவிற்கு நான் செய்த அநீதிகளும் உனது முன்னிலையில் உள்ளன. பெரும் கண்ணியமுடையவனே! உன்னிடமிருந்தே ஒவ்வொரு பெரிய விஷயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. எனவே நீ அனைத்து பெரும் பாவங்களையும் மன்னிப்பாயாக.”

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், 'விஷயம் என்னவென்றால், ஜிப்ரயீல் என்னிடம் வந்து இந்தச் சொற்களை ஓதுமாறு கூறினார். எனவே நீயும் உனது சஜ்தாக்களில் இதனை ஓதுவாயாக. எவர் இந்தச் சொற்களை ஓதுவாரோ அவர் சஜ்தாவிலிருந்து தலையை உயர்த்துவதற்கு முன்பே மன்னிக்கப்படுவார் என்று கூறினார்கள்.'

இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில், ஜிப்ரயீல் அன்னாரிடம் வந்து, தங்களது இறைவன் தங்களை பகீஃ மயானத்தில் உள்ளவர்களுக்காகப் பாவமன்னிப்புத் தேடச் சொல்கிறான் என்று கூறினார். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நானும் இந்த நன்மையில் பங்கேற்க முடியுமா? நான் அவர்களுக்காக எப்படி துஆ செய்வது? என்று கேட்டார்கள்.'

நீங்களோ துஆ செய்துவிட்டீர்கள்! நானும் அந்த இடத்திலிருந்து திரும்பி வந்துள்ளேன்; எனவே நான் அவர்களுக்காக என்ன துஆ செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்ய கற்றுக்கொடுத்தார்கள்: "முஃமின்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இந்த இல்லறத்தார் மீது சாந்தி உண்டாவதாக. அல்லாஹ் நம்மில் முந்தியவர்களுக்கும் பிந்தியவர்களுக்கும் கருணை காட்டுவானாக. அல்லாஹ் நாடினால் நாங்களும் உங்களுடன் வந்து இணைவோம்."

**ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரிடம் நீங்கள் கண்டவற்றில் மிகவும் அழகான மற்றும் ஆச்சரியமான விஷயத்தைக் கூறுங்கள் என்று கேட்டார்.** இதைக் கேட்டதும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அழுதுவிட்டார்கள். அன்னாரின் ஒவ்வொரு விஷயமுமே அழகானதும் ஆச்சரியமானதும்தான் என்று கூறிவிட்டு ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தார்கள்: ஒருமுறை எனது வீட்டில் தங்கும் முறை இருந்த இரவு, அன்னார் என்னிடம் வந்து என்னுடன் போர்வையில் படுத்துக்கொண்டார்கள். அன்னார் தம் உடலை எனது உடலோடு சேர்த்து படுத்தபோது அதை நான் உணர்ந்தேன். அப்போது அன்னார், 'ஆயிஷா! நீ அனுமதித்தால், இந்த இரவின் மீதமுள்ள பகுதியை எனது இறைவனை வணங்குவதில் கழிக்க விரும்புகிறேன் என்று கேட்டார்கள்.' நான் கூறினேன்: எனக்கு தங்களது அருகாமையும் பிடிக்கும்; அதேசமயம் தங்களது விருப்பத்தையும் நான் நேசிக்கிறேன். தாங்கள் இறை வணக்கம் செய்ய விரும்பினால் செய்யுங்கள்.

பிறகு அன்னார் உளூ செய்த பிறகு, எழுந்து நின்று திருக்குர்ஆனை ஓதித் தொழத் தொடங்கினார்கள்; அழுது கொண்டே சென்றார்கள். எந்த அளவுக்கென்றால், அன்னாரின் கண்ணீர் அன்னாரது ஆடை நனையும் வரை வழிவதை நான் கண்டேன். பிறகு அன்னார் தம் வலது பக்கம் சாய்ந்து படுத்து, தமது வலது கையை கன்னத்தின் கீழ் வைத்தார்கள். அப்போதும் அழுதுகொண்டே இருந்தார்கள்; எந்த அளவுக்கென்றால் அன்னாரின் கண்ணீர் தரை வரை வந்தடைந்ததை நான் கண்டேன்.

அதிகாலை நேரம் வந்ததும், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஃபஜ்ர் தொழுகைக்காக அன்னாரை அழைக்க வந்தார்கள். அன்னார் அழுதுகொண்டிருப்பதைக் கண்டு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்கள் முன்பின் பாவங்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னித்துவிட்ட பிறகும் தாங்கள் ஏன் அழுகிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், நான் நன்றியுள்ள அடியாராக இருக்க வேண்டாமா என்று பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையுமே இறைவன் மீதான நேசத்தில் மூழ்கியிருந்தது. அந்த அன்பின் காட்சிகளைக் கண்டுதான் மக்கா வாசிகள்,

إِنَّ مُحَمَّدًا عَشِقَ رَبَّهُ

அதாவது, முஹம்மது(ஸல்) தனது இறைவனின் காதலராக மாறிவிட்டார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதியைக் குறித்தும் அல்லாஹ்வின் மீதான அன்னாரது நேசத்தின் முன்மாதிரியைக் குறித்தும் சில உதாரணங்களை நான் எடுத்து வைத்தேன். இந்த அழகிய முன்மாதிரியின் விளைவாகவே ஸஹாபிகளிடத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டது. அதற்கு முன் கற்பனை கூட செய்ய முடியாத ஓர் உன்னத நிலையை அவர்கள் அடைந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய அந்த முழுமையான, நிறைவான போதனைகளையே அன்னாரின் உண்மை ஊழியரான ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களும் தமதாக்கினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிடுகையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றியதன் காரணமாகவே அல்லாஹ் தமக்கு அருட்கொடைகளை வழங்கியதாகக் கூறினார்கள்.

இன்று நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றுபவர்கள் என்றும், அன்னாரின் உண்மை ஊழியரின் கரத்தில் பைஅத் செய்து நமது வாழ்க்கையை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்ப அமைப்பதற்கு முயற்சி செய்வோம் என்றும் வாக்குறுதி அளித்துள்ளோம். எனவே, நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் கலப்பற்ற முறையில் அல்லாஹ்விற்காக மட்டுமே செய்ய வேண்டும்; அவனது அன்பில் முன்னேற முயற்சிக்க வேண்டும்; இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். அத்தகைய நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக.

பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகளுக்காக இன்றைய நாட்களில் துஆ செய்து வாருங்கள். அங்கு நடைபெற்று வந்த முபாரக் ஸானி சாஹிப் மீதான வழக்கில் செஷன்ஸ் நீதிபதி அவருக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளார். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, அவர் திருக்குர்ஆனை வைத்திருந்தார்; அதனை ஓதினார்; மற்றவர்களுக்குக் கற்பித்தார் என்பதுதான்!

இதுதான் அங்கிருக்கும் பெயரளவிலான ஆலிம்கள் மற்றும் அவர்களின் கூட்டாளிகளின் நிலை. அரசாங்கமும் அதன் நிர்வாகமும் இத்தகைய மவ்லவிகளுக்குப் பின்னால் சென்று சில இடங்களில் இவ்வாறே செயல்படுகின்றன.

அல்லாஹ் இவர்களை மிக விரைவாகப் பிடிப்பதற்கான வழிவகையை ஏற்படுத்த வேண்டும் என்று நாம் துஆ செய்கிறோம். அல்லாஹ்வின் பிடி மிக விரைவில் அவர்கள் மீது இறங்கும் இன்ஷா அல்லாஹ்! அதன் அறிகுறிகளும் தென்படுகின்றன. ஆனால், நமது துஆக்களில் குறைபாடோ அல்லது நமது செயல்கள் அல்லது இறைவணக்கங்களுக்குரிய

உரிமையை செலுத்தாததன் காரணமாக அதில் காலதாமதம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். இதனால்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட மேகங்களைக் கண்டால் சில சமயங்களில் அச்சத்துடன் துஆ செய்வார்கள். எனவே, துஆக்களின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது.

அதேபோல், உலகில் உள்ள மற்ற அனைத்து அநீதிக்குள்ளான மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லா இடங்களிலும் அனைவருக்கும் பாதுகாப்பை வழங்கி, அனைத்து குழப்பங்களிலிருந்தும் அனைவரையும் பாதுகாப்பானாக.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள்.*

முதலாவது நற்குறிப்பு, மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் நய்யர் சாஹிப் அவர்களுடையதாகும். இவர் காதியானில் உள்ள ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் முன்னாள் தலைவராகவும், மஜ்லிஸ் தெஹ்ரீகே ஜதீதின் தலைவராகவும் இருந்தவர்.

இவரது தந்தை கேரளாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய எச். ஹுசைன் சாஹிப் அவர்கள் 1922 -ல் அஹ்மதிய்யத்தை ஏற்றார். பின்னர் கேரளாவிலிருந்து வெளியாகும் ஜமாஅத்தின் 'சத்யதூதன்' இதழின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். மர்ஹூமின் தந்தை எச். ஹுசைன் சாஹிப் அவர்கள் 1950 -ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் எடுத்து வைத்த காதியானில் குடியேறுவதற்கான திட்டத்தை ஏற்று, தனது முழு குடும்பத்துடன் காதியானுக்கு வந்து அங்கேயே குடியேறினார். ஆனால், ஓராண்டிற்குள்ளேயே காதியானில் அவர் வஃபாத் ஆனார்.

ஜலாலுத்தீன் சாஹிபின் தாயார் ஸுபைதா சுல்தானா சாஹிபா, அதன் பிறகு அங்கு தர்வேஷாக இருந்த சவுத்ரி அப்துல் ஹக் சாஹிபை மறுமணம் செய்து கொண்டார். ஜலாலுத்தீன் சாஹிபின் ஆரம்பக் கல்வி காதியானில் அமைந்தது. 1963 -ல் அவர் மவ்லவி ஃபாஸில் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் பைத்துல் மால் இன்ஸ்பெக்டர் ஆக நியமிக்கப்பட்டு நீண்ட காலம் தொண்டாற்றினார். இதன் காரணமாக இந்தியா முழுவதும் உள்ள ஜமாஅத் அன்பர்களுடன் அவருக்கு தனிப்பட்ட தொடர்பும் இருந்தது.

மர்ஹூம் 63 ஆண்டுகள் ஜமாஅத்துக்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றார். இந்தக் காலகட்டத்தில் கணக்காய்வாளராகவும் பின்னர் நீண்ட காலம் நாஸிர் பைத்துல் மால் ஆமத் ஆகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. ஏழு ஆண்டுகள் காதியான் ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவராகவும், உடல்நிலை ஒத்துழைக்கும் வரை ஸத்ர் மஜ்லிஸ் தெஹ்ரீகே ஜதீதின் தலைவராகவும் இருந்தார். அதேபோல் கிளை அமைப்புகளிலும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

அவர் மிகுந்த இறைவணக்கம் செய்பவராகவும், தொழுகை மற்றும் நோன்புகளைப் பேணுபவராகவும் இருந்தார். கிலாஃபத்தின் ஒவ்வொரு கட்டளையையும் நிறைவேற்றுவதில் முதன்மையானவர்களில் ஒருவராக இருந்தார். அவர் ஒரு விளையாட்டு வீரராகவும் இருந்தார். மர்ஹூமுக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர்; அவர்கள் ஜமாஅத்துக்கு தொண்டாற்றி வருகின்றனர்.

அடுத்த நற்குறிப்பு, மதிப்பிற்குரிய மீர் ஹபீப் அஹ்மத் சாஹிப் அவர்களுடையதாகும். இவர் மீர் முஷ்தாக் அஹ்மத் சாஹிபின் மகனாவார்.

***ஹுஸூர் அவர்கள் இந்த மர்ஹூமுடைய நற்குறிப்பை எடுத்துரைத்த பிறகு இரு மர்ஹூம்களின் பாவ மன்னிப்பிற்காகவும் உயர் அந்தஸ்துக்காகவும் துஆ செய்தார்கள். ஜனாஸா காயிப் தொழ வைப்பதாகவும் அறிவித்தார்கள்.***

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ
اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ
يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)